செ.இ.எண் : 292 நாள் : 17-08-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 17.8.2012

வேலூர் மாவட்டம், திருவலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. G.அசோகன் அவர்கள் 13.8.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், வேலூர் தெற்கு காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. N.அருள் அவர்கள் 14.8.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் பெங்களூர் - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் விருஞ்சிபுரம் அருகே சென்று கொண்டிருந்த போது நிலை தடுமாறி விழுந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், திருவேற்காடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S. தேவராஜ் அவர்கள் 15.8.2012 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. அசோகன், திரு. தேவராஜ் மற்றும் முதல் நிலைக் காவலர் திரு. அருள் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாரடைப்பால் காலமான திரு. அசோகன், சாலை விபத்தில் காலமான திரு. அருள் மற்றும் உடல் நலக் குறைவால் காலமான திரு. தேவராஜ் ஆகியோரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9